# *தமிழுக்கு ஓர் அகல்விளக்கு*

தமிழ்த்துறை, முத்தமிழ்ப் பேரவையின் ‘தகளி’ - இதழ் வெளியீட்டு விழா (24.10.2018) புதன்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் இனிது நடந்தது. மக்களாட்சியின் தூணாக வர்ணிக்கப்படும் பத்திரிகைத் துறையில் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தயாரான ‘தகளி’ இதழை வெளியிட்டுச் சிறப்புரையாற்ற புதுதில்லி, சாகித்திய அகாதெமியின் முன்னாள் துணைச்செயலர் முனைவர் அ.சு. இளங்கோவன் வருகை புரிந்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்து முதலாமாண்டு இளம் அறிவியல் (உளவியல்) மாணவி எஸ். ஆதிராவின் நடனமாக மலர்ந்தது. முதலாமாண்டு சமூகப்பணி மாணவி தி. அதித்யா வரவேற்புரையைக் கவிதை நடையில் சொல்லி எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தார்.

தமிழ் மொழியில் சுயசரிதை குறைவு; தமிழ் வாசிப்பு குறைந்து வருகிறது; ஆராயப்படாத தமிழ்க் கல்வெட்டுகள் இன்னும் கிடப்பில் உள்ளன என்று பேசிய கல்லூரித் தலைவர் முனைவர் அ.மு. சுவாமிநாதன் மாணவர்கள் இந்தத் துறைகளில் பார்வை செலுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். தமிழ்த்துறையைச் சார்ந்தவர்கள்தான் தமிழாய்வு மேற்கொள்ள வேண்டும் என்ற கட்டாயமில்லை, ஆர்வம் இருக்கிற எல்லா துறை மாணவர்களும் தமிழுக்குத் தங்கள் பங்களிப்பு வழங்கலாம் என்று தன் ஆதங்கத்தைத் தலைமையுரையில் வெளிப்படுத்தினார்.

இதழுக்குப் படைப்புகளைப் பெறும் முயற்சியில் தம்மை இணைத்துக் கொண்ட இளநிலை மாணவர்களை முதல்வர் முனைவர் எஸ். இராஜா சாமுவேல் வெகுவாகப் பாராட்டினார். இந்தத் தன்மையால் தமிழுக்கு மாணவர்களின் குறைந்த பங்களிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக நம்பிக்கை தெரிவித்து வாழ்த்தினார்.

பல நூல்களைப் படைத்து தமிழ் - ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமையும் முனைவர் பட்டமும் பெற்ற முனைவர் அ.சு. இளங்கோவன் இதழின் படைப்புகளை மனம் திறந்து பாராட்டினார். கவிதை, சிறுகதை, கட்டுரை என்று பல தளங்களிலும் சிறப்பாக இதழ் பயணிக்கிறது என்பதால்

இதழாசிரியர் முனைவர் சி.ஆர். மஞ்சுளா கூடுதல் பாராட்டுக்கு உரியவர் என்று புகழாரம் சூட்டினார். ‘தகளி’ - என்றால் ‘அகல்விளக்கு’ என்றும் இந்தச் சொல்லை ஆழ்வார் பாடல் வழி ஆசிரியர் கையாண்டுள்ளார் என்றும் குறிப்பிட்டுப் பேசினார்.

முதலாமாண்டு இளம் அறிவியல் (உளவியல்) மாணவிகளான ச. ஷில்பா பாடிய பாரதியார் பாடலும், செ. சரண்யாவின் நன்றியுரையும் நிகழ்ச்சிக்கு மேலும் அழகு சேர்த்தன. இரண்டாமாண்டு இளம் அறிவியல் (உளவியல்) மாணவன் லெ.சோ. தியோடர் ஜாக்சனின் இதழ் வடிவமைப்பு இதழ் வாசிப்பாளர்களின் புருவத்தை உயர்த்தியது. நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவை எய்தியது. தமிழ்ப்பற்றுடைய ஆங்கிலத்துறைப் பேராசிரியர் வி. ஐஸ்வர்யா நிகழ்ச்சி ஏற்பாடுகளில் உறுதுணையாக இருந்தார்.


